தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்ட மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி2) துறை

அரசாணை (நிலை) எண்.4 நாள் 05–01–2007

படிக்கப்பட்டது

1 அரசாணை நிலை எண்.135/சந (ம) சதி துறை, நாள் 17.6.2005.
2 அரசாணை நிலை எண்.203/ சந (ம) சதி துறை, நாள் 19.8.2005.
3 அரசாணை நிலை எண்.74/சந (ம) சதி துறை, நாள் 12.7.2006.
4 அரசாணை நிலை எண்.88/சந (ம) சதி துறை, நாள் 21.8.2006.
5 திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களின் கடித எண்.இ3–1/3659/04, நாள் 6.9.2006.
6 சமூக நல இயக்குநர், சென்னை. அவர்களின் கடித எண்.47695/06/சஉதி, நாள் 8.11.2006.
7 சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (கல்வி) கடித எண்.க.து.ந.க.எம்1/ 2123/06, நாள் 4.12.2006.

---

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில், காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்களின் 7655 பணியிடங்களுக்கு கல்வித் தகுதி, வயது வரம்பு இட ஒதுக்கீடு முறை மற்றும் பணியாளர் தேர்வுமுறை ஆகியவற்றை அரசு ஆணைகளின்படி தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி பணிநியமனம் செய்ய ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே கூறப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்ட 7655 பணியிடங்களில் நிரப்பப்படாத பணியிடங்கள் 5508 ம், படிக்கப்பட்டவை 3–ல் காணும் அரசு ஆணையின்படி புதிதாக துவக்கப்பட்ட 3049 மையங்களில் நிரப்ப வேண்டிய 4520 பணியிடங்களையும் சேர்த்து ஆக மொத்தம் 10,028 சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நிரப்ப மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வழங்கப்பட்டது.

3) மேலே, ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் , ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் அவர்கள் மேலும், 2361 அங்கன்வாடி பணியாளர்கள் 6434 அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகமொத்தம் 8795 காலிப் பணியிடங்கள் உள்ளதென்றும் இக்காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு புதிய பணிநியமனம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4) படிக்கப்பட்டவை ஆறில் காணும் கடிதத்தில் சமூக நல இயக்குநர் அவர்களும் 1.10.2006 அன்று உள்ள நிலவரப்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி இன்னும் கீழ்க்காணுமாறு 10736 பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது என தெரிவித்து அப்பணியிடங்களையும் நிரப்புவதற்கு ஆணைவெளியிட அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| சத்துணவு அமைப்பாளர்கள் | = | 1509 |
| சமையலர்கள் | = | 3259 |
| உதவியாளர்கள் | = | 5968 |
| மொத்தம் | = | 10736 |

5) படிக்கப்பட்டவை ஏழில் காணும் சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (கல்வி) அவர்களின் கடிதத்தில் பின் வரும் காலிப் பணியிடங்களை நிரப்ப ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| சத்துணவு அமைப்பாளர் | = | 18 |
| சமையலர் | = | 103 |
| உதவியாளர் | = | 93 |
| | | 214 |

6) துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்புகளின்படி புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம், மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படும் பள்ளிச் சத்துணவு மையங்கள்/ அங்கன்வாடி மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்ய கிழ்க்கண்டவாறு புதிய பணிநியமனங்கள் செய்ய வேண்டியுள்ளது : –

<u>மொத்த காலிப் பணியிடங்கள் விவரம் : –</u>

| பதவி | சமூக நல இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிச் சத்துணவு மையங்களில் காலிப் பணியிடங்கள் | திட்ட ஒருங்கிணைப் பாளர் கட்டுப்பாட்டில் உள்ள அங்கன்வாடி மையங்களின் காலிப் பணியிடங்கள் | சென்னை மாநகராட்சிக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிச் சத்துணவு மையங்களில் காலிப் பணியிடங்கள் | மொத்தக் காலிப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| சத்துணவு அமைப்பாளர்கள் | 1509 | – | 18 | 1527 |
| சத்துணவு சமையலர்கள் | 3259 | – | 103 | 3362 |
| சத்துணவு உதவியாளர்கள் | 5968 | – | 93 | 6061 |
| அங்கன்வாடி பணியாளர்கள் | – | 2361 | – | 2361 |
| அங்கன்வாடி உதவியாளர்கள் | – | 6434 | – | 6434 |
| மொத்தம் | 10736 | 8795 | 214 | 19745 |

7) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் மேலே பத்தி ஆறில் கண்டுள்ளவாறு நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய மொத்தக் காலிப் பணியிடங்கள் 19745 ஐ இவ்வாணையின் இணைப்பில் விவரித்துள்ளவாறு தற்போதுள்ள ஆணைகளின்படி கல்வித் தகுதி, வயதுவரம்பு, இடஒதுக்கீடு முறை, பணியாளர் தேர்வுமுறை, மையத்திலிருந்து தூர சுற்றளவு கடைபிடிப்பது போன்ற தெளிவுரைகளை பின்பற்றி நேரடி நியமனம் மூலம் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அந்தந்த பதவிக்குரிய தேர்வுக் குழு மூலம் பணிநியமனம் செய்ய அனுமதி அளிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

8) மாவட்ட வாரியாக காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்த விவரத்தையும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் அரசுக்கு அறிக்கை அனுப்பிவைக்கும்படி துறைத் தலைவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9) இந்த அரசாணை நிதித்துறை இசைவுடன் (அ.சா.கு. எண்.303S.S(KPR)/06, நாள் 29–12–2006) வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நா.ச. பழனியப்பன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
1) இயக்குநர்,
சமூக நலத்துறை, சென்னை–5.
2) திட்ட ஒருங்கிணைப்பாளர்,
உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
3) நகராட்சி நிர்வாக ஆணையர்,
சென்னை–5.
4) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
5) ஆணையர்,
கருவூலம் (ம) கணக்குத் துறை, சென்னை,
6) ஆணையர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
7) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79
8) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
மதுரை.
9) அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்</u> :-
1) நிதி (சந) துறை, சென்னை–9
2) ச.ந. (ம) ச.தி. (சந 7 பிரிவு) துறை, சென்னை–9
3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9
4) மாண்புமிகு அமைச்சர் (ச.ந.)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
5) இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

## இணைப்பு – I

அரசாணை நிலை எண் 88 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 21.8.2006–ன்படி ஏற்கனவே நிரப்பிய பணியிடங்கள் போக நிரப்பப்பட வேண்டிய எஞ்சிய சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர் காலிப் பணியிட விவரம்

| வ. எண் | மாவட்டம் | சத்துணவு அமைப்பாளர் | சத்துணவு சமையலர் | சத்துணவு உதவியாளர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 38 | 104 | 141 | 283 |
| 2 | திருவள்ளூர் | 41 | 105 | 249 | 395 |
| 3 | கடலூர் | 55 | 48 | 194 | 297 |
| 4 | விழுப்புரம் | 71 | 179 | 362 | 612 |
| 5 | வேலூர் | 63 | 186 | 270 | 519 |
| 6 | திருவண்ணாமலை | 56 | 129 | 170 | 355 |
| 7 | சேலம் | 73 | 116 | 238 | 427 |
| 8 | நாமக்கல் | 31 | 85 | 140 | 256 |
| 9 | தருமபுரி | 65 | 108 | 216 | 389 |
| 10 | கிருஷ்ணகிரி | 123 | 158 | 336 | 617 |
| 11 | ஈரோடு | 67 | 140 | 342 | 549 |
| 12 | கோயம்புத்தூர் | 64 | 192 | 266 | 522 |
| 13 | நீலகிரி | 18 | 52 | 124 | 194 |
| 14 | தஞ்சாவூர் | 40 | 180 | 191 | 411 |
| 15 | நாகப்பட்டிணம் | 44 | 209 | 278 | **531** |
| 16 | திருவாரூர் | 36 | 93 | 213 | 342 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 53 | 91 | 189 | 333 |
| 18 | கரூர் | 9 | 38 | 47 | 94 |
| 19 | பெரம்பலூர் | 65 | 76 | 95 | 236 |
| 20 | புதுக்கோட்டை | 59 | 41 | 149 | 249 |
| 21 | மதுரை | 42 | 86 | 94 | 222 |
| 22 | தேனி | 25 | 49 | 99 | 173 |
| 23 | திண்டுக்கல் | 55 | 152 | 185 | 392 |
| 24 | இராமநாதபுரம் | 47 | 89 | 118 | 254 |
| 25 | விருதுநகர் | 54 | 134 | 164 | 352 |
| 26 | சிவகங்கை | 61 | 124 | 240 | 425 |
| 27 | திருநெல்வேலி | 51 | 57 | 415 | 523 |
| 28 | தூத்துக்குடி | 84 | 205 | 310 | 599 |
| 29 | கன்னியாகுமரி | 19 | 33 | 133 | 185 |
| 30 | சென்னை மாநகராட்சி | 18 | 103 | 93 | 214 |
| | மொத்தம் | 1527 | 3362 | 6061 | 10950 |

நா..ச. பழனியப்பன்,
அரசுச் செயலாளர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

## இணைப்பு – II

அரசாணை நிலை எண்.88 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 21.8.2006 ன்படி ஏற்கனவே நிரப்பிய பணியிடங்கள் போக நிரப்பப்பட வேண்டிய அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் காலிப் பணி விவரம்

| வ. எண் | மாவட்டம் | அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 4 | 185 | 189 |
| 2 | திருவள்ளூர் | 5 | 83 | 88 |
| 3 | கடலூர் | 25 | 92 | 117 |
| 4 | விழுப்புரம் | 0 | 467 | 467 |
| 5 | வேலூர் | 92 | 303 | 395 |
| 6 | திருவண்ணாமலை | 0 | 0 | 0 |
| 7 | சேலம் | 0 | 426 | 426 |
| 8 | நாமக்கல் | 22 | 405 | 427 |
| 9 | தருமபுரி | 37 | 168 | 205 |
| 10 | கிருஷ்ணகிரி | 72 | 264 | 336 |
| 11 | ஈரோடு | 341 | 518 | 859 |
| 12 | கோயம்புத்தூர் | 394 | 202 | 596 |
| 13 | நீலகிரி | 80 | 81 | 161 |
| 14 | தஞ்சாவூர் | 5 | 276 | 281 |
| 15 | நாகப்பட்டிணம் | 49 | 155 | **204** |
| 16 | திருவாரூர் | 41 | 294 | 335 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 7 | 162 | 169 |
| 18 | கரூர் | 0 | 105 | 105 |
| 19 | பெரம்பலூர் | 47 | 99 | 146 |
| 20 | புதுக்கோட்டை | 0 | 4 | 4 |
| 21 | மதுரை | 106 | 66 | 172 |
| 22 | தேனி | 105 | 244 | 349 |
| 23 | திண்டுக்கல் | 173 | 308 | 481 |
| 24 | இராமநாதபுரம் | 45 | 182 | 227 |
| 25 | விருதுநகர் | 0 | 164 | 164 |
| 26 | சிவகங்கை | 15 | 259 | 274 |
| 27 | திருநெல்வேலி | 439 | 503 | 942 |
| 28 | தூத்துக்குடி | 46 | 265 | 311 |
| 29 | கன்னியாகுமரி | 24 | 154 | 178 |
| 30 | சென்னை | 187 | - | 187 |
| | மொத்தம் | 2361 | 6434 | 8795 |

நா.ச. பழனியப்பன்
அரசுச் செயலாளர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலவலர்